<u>செய்தி வெளியீடு – 15.5.2008</u>

## <u>12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடம் பெற்ற மாணவ – மாணவியருக்குப் பரிசுகளும் பாராட்டுகளும் முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்</u>

தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசுத் தேர்வுத் துறை நடத்தும் 12–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்து மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனை படைக்கும் மாணவ மாணவியரின் உயர் கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்கும் திட்டம் 1996–ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாகும்.

அத்திட்டத்தின்கீழ், 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகளின்படி 1200க்கு 1182 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள நாமக்கல் மாவட்டம் வித்யவிகாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ஆர். தாரணி, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு புனித வளனார் மேல்நிலைப் பள்ளி மாணவன் செல்வன் எம். ராஜேஷ் குமார் ஆகிய இருவருக்கும் தலா 15,000/– ரூபாய், 1200க்கு 1181 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி எ. ரம்யா, நாமக்கல் மாவட்டம் வித்யவிகாஸ் மேல்நிலைப் பள்ளி மாணவன் செல்வன் எஸ். தளபதிக் குமார விக்ரம் (சார்பாக பள்ளி தாளாளர்) ஆகிய இருவருக்கும் தலா 12,000/– ரூபாய், 1180 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் எஸ்.ஆர்.வி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி கே.தீபா–விற்கு 10,000/– ரூபாய் என ஐந்து மாணவ மாணவியருக்கும் மொத்தம் 64 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (15.5.2008) வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியர் எந்தக் கல்லூரியில், எந்தப் பட்டப் படிப்பில் சேர்ந்து படித்தாலும் அதற்குரிய செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் அவர்களிடம் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்.

பரிசு பெற்ற மாணவ மாணவியரும், பெற்றோரும் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இந்த மகத்தான திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 12ஆம் வகுப்புத் தேர்வுகளில் மாநில, மாவட்ட அளவில் சாதனைகள் படைக்கும் ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர் ஆண்டுதோறும் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அருமையான வாய்ப்புகள் கிடைக்கின்றன என்றும், இந்த ஆண்டில் அந்த வாய்ப்புகளைத் தங்களுக்கு வழங்கியமைக்காக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாகவும் மனம் நெகிழ்ந்து கூறி மகிழ்ந்தனர்.

இன்று மாநில அளவில் முதலிடம் எய்திப் பரிசுகள் பெற்றுள்ள செல்வி ஆர். தாரணி, இரண்டாம் இடம் எய்திப் பரிசு பெற்றுள்ள செல்வி ஏ. ரம்யா ஆகிய இருவரும் கடந்த 2006–ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 500க்கு 491 மதிப்பெண்கள் எய்தி மாநில அளவில் முதல் இடம் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 13.6.2006 அன்று பரிசும், பாராட்டும் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, உயர் கல்வி மற்றும் கனிமத் துறை அமைச்சர் திரு. க. பொன்முடி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, செயலாளர் திரு. எம். குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. டி.ஜெகந்நாதன், அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி வசந்தி ஜீவானந்தம் மற்றும் பள்ளித்தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

* * *